## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| H.M.O.P. No. 78/2021 | Date : 11.01.2024 | PW2 |
|---|---|---|
| Name: மாது | W/o. மாணிக்கம் | |
| Evidence Recorded Time: 1.36 P.M. to 2.10 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனக்கு எத்தனை மகன்கள் என்றால் நான்கு மகன்கள். நான், என் மகன் என அனைவரும் ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறோம் என்றால் இல்லை, முன்பு இருந்தோம் தற்போது இல்லை. திருமணத்திற்கு பின்னிட்டு எனது மகனுக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள பிரச்சனை என் மகன் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். மறு அழைப்பின் போது எதிர்மனுதாரர் தனது அக்கா கணவருடன் ஒப்பிட்டு பேசியதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்பது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை பெண் பார்க்க சென்றபோது அவர் தனது விருப்பத்தை சொன்னாரா என்றால் அவர் எதுவும் சொல்லவில்லை அவரின் பெற்றோரின் தூண்டுதலால்தான் திருமணத்திற்கு சம்மதித்தார். என் மகன் திருமணத்திற்கு முன்பு என்ன வேலைக்கு சென்றார் என்றால் உணவகத்தில் வேலை செய்து வந்தார். தற்போது என்ன வேலை செய்து வருகிறார் என்றால் உணவகத்தில் சமையல் வேலைக்கு தான் சென்று கொண்டிருக்கிறார். உணவகத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 2 கி.மீ துாரம் இருக்கும். வேலைக்கு வண்டியில் சென்று வருகிறார் என்றால் இல்லை பேருந்தில் செல்வார், உடன் யாரேனும் வந்தால் அவர்களுடனும் செல்வார். என் மகன் இருசக்கர வாகனம் ஓட்டுவாரா என்றால் ஓட்டுவார். தற்போதும் இருசக்கர வாகனம் ஓட்டுகிறாரா என்றால் ஓட்டுகிறார். எதிர்மனுதாரர் நிறைமாதமாக இருக்கும் போது நான், என் மற்றொரு மகன் சண்முகம், அவர் மனைவி கோமதி ஆகியோர் சேர்ந்து தாக்கி வரதட்சனையாக ரூபாய் மூன்று லட்சம் வாங்கி வர சொன்னோம் என்றால் சரியல்ல. நாங்கள் கேட்ட வரதட்சணையை கொடுக்காத காரணத்தினால் தான் எதிர்மனுதாரரை அடித்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் என் மகனுடன் ஒருநாள் கூட வாழவில்லை. எவ்வளவு நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் ஒரு நாள் கூட என் மகனுடன் ஒரே வீட்டில் சேர்ந்து வாழவில்லை, அவர்

பெற்றோர் வீட்டில் தான் இருந்தார். வளைகாப்பு எதிர்மனுதாரர் பெற்றோர் சொன்னதால் எங்கள் வீட்டில் வைத்து நடத்தப்பட்டது. எதிர்மனுதாரரின் பெற்றோர் இருவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்று பஞ்சாயத்தார்களை வைத்து பேசிய பிறகுதான் எங்கள் வீட்டில் வைத்து வளைகாப்பு நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. வளைகாப்பிற்கு ஆன செலவுகளை எதிர்மனுதாரரின் பெற்றோர் தான் செய்தார்கள் என்றால் அதில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. பெண்ணுக்கு முதல் குழந்தை பிறக்கும் போது பெண்ணின் வீட்டில்தான் வளைகாப்பு செய்வார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பெற்றோர்கள்தான் வளைகாப்பு செலவுகளை செய்தார்கள் என்றால் அவர்கள் உறவினர்களை அழைத்து எங்கள் வீட்டில் வைத்து வளைகாப்பு செய்தார்கள் என்றால் எங்கள் வீட்டில் வைத்து நடக்கவில்லை பக்கத்து வீட்டில் வைத்து நடத்தப்பட்டது. எதிர் மனுதாரருக்கு எந்த தேதியில் குழந்தை பிறந்தது என்றால் 2008–ல் குழந்தை பிறந்தது, தேதி, மாதம் தெரியவில்லை. என் பிரமாண பத்திரத்தில் 2009–ல் குழந்தை பிறந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தட்டச்சு செய்யும் போது தவறுதலாக தட்டச்சு செய்துவிட்டார்கள். எதிர்மனுதாரருக்கு குழந்தை பிறந்த பிறகு எங்களுக்கு சொல்லியும் நாங்கள் சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல, சென்று பார்த்தோம். எந்த மருத்துவமனையில் குழந்தை பிறந்தது என்றால் நினைவில்லை, மேட்டுரில் உள்ள தனியார் மருத்துவ மனையில் பிறந்தது. முதல் பிரசவத்திற்கு எதிர்மனுதாரர் பெற்றோர் தான் செலவு செய்தார்கள் என்றால் இல்லை என் மகன்தான் செய்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு ஐந்து மாதம் கழித்து அழைத்து சென்றதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் ஐந்து முறை தற்கொலை முயற்சி செய்ததாக பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 05.06.2009–ம் தேதி என் மகனிடம் எதிர்மனுதாரர் உறவினர்கள் தகராறு செய்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 08.01.2010–ம் தேதி மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் மீது, என் மகன் மற்றும் குடும்பத்தினர் மீது வரதட்சனை புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், அது பொய்யான புகார் ஆகும். அந்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக ராசிபுரம் காவல் நிலையத்தில் சேர்ந்து வாழ்வதாக மனு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல,

நாங்கள் மனு கொடுத்த பிறகுதான் எதிர்மனுதாரர் புகாரே கொடுத்தார். எதிர்மனுதாரர் மூன்று லட்சம் கொடுத்தால் விவாகரத்து கொடுப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, காவல் நிலையத்தில் வைத்து காவல் உதவி ஆய்வாளர் முன்னிலையில் தான் அவ்வாறு கூறினார். என் மகனுக்கு எந்த தேதியில் எங்கு விபத்து ஏற்பட்டது என்றால் சேலம் ஜங்க்சன் பகுதியில் விபத்து ஏற்பட்டது. என் மகனுக்கு விபத்து ஏற்பட்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகன் சேலத்தில் உள்ள ஒரு கௌதமி என்பவருடன் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து பெறாமலேயே குடும்பம் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. கௌதமிக்கு மனுதாரருக்கு எதிர்மனுதாரருடன் திருமணம் நடைபெற்ற விவரம் தெரியாது என்றால் அது தவறாகும். எதிர்மனுதாரர் மனுதாரருடன் பேசவேண்டும் என்ற எண்ணத்தில் போன் செய்த போது கௌதமி எடுத்து பேசி தான் மனுதாரருடன் வாழ்ந்து வருவதாக சொன்னதன் அடிப்படையில்தான் இந்த மனுதாரருக்கும், கௌதமிக்கும் திருமணம் நடைபெற்ற விவரம் எதிர்மனுதாரருக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. கௌதமிக்கு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணம் பற்றி விவரம் தெரியவந்த போது என் மகனை விட்டு கௌதமி பிரிந்து சென்றதால் என் மகன் கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. 07.05.2011-ம் தேதி என் மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும், விபத்தினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு வந்து மருத்துவரை விசாரித்த போது விபத்தினால் கழுத்து அறுபடவில்லை என்றும், கழுத்து அறுக்கப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என் மகன் மருத்துவமனையில் இருக்கும் போது அவருக்கு உதவியாக இருந்தார் என்றாலும், சிகிச்சை முடித்து வரும்போது எதிர்மனுதாரரை வீட்டிற்குள் வரக்கூடாது என்று சொன்னேன் என்றாலும் சரியல்ல. என் மூன்றாம் மகன் பெயர் என்ன என்றால் ஜானகிராமன் ஆகும். அவருக்கு திருமணம் நடைபெற்று அவர் மனைவியும் சேர்ந்து பிழைக்கவில்லை என்றால் சரிதான். மூன்றாம் மகனும் எங்களுடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். அவர்

மனைவி பெயர் என்ன என்றால் ஸ்ரீமாரி ஆகும். அவர் தற்போது வரை அவர் பெற்றோர் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். தற்போது சாட்சி  அவர் பிரசவத்திற்காக அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளதாக கூறுகிறார். வரதட்சணை கேட்டு அவரையும் அடித்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதால்தான் எதிர்மனுதாரரும், மூன்றாம் மகனின் மனைவியும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் குழந்தையை சென்று பார்த்தோமா என்றால் பெயர் நாங்கள் தான் வைத்தோம், அந்த குழந்தை என் மகனுக்கு பிறக்கவில்லை என்று சொன்ன பிறகு நாங்கள் சென்று பார்க்கவில்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் என் மகன் சேர்ந்து வாழ தயாராக இல்லை . எதிர்மனுதாரர் பிரிந்த வாழ காரணம் நான்தான் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்க கூடியது இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.